**Chapter XXIII code Criminal Procedure)**

**IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE No.I COURT, NAGAPATTINAM**

Calendar
Miscellaneous

Preliminary Register CC 588/2021

Sessions
Deposition of witness for : (LW 12 –PW 7 )

| | | | |
|---|---|---|---|
| Name : | திருஞானம் | Village /Taluk : | |
| Fathers Name | சோமசுந்திரம் | Caste /Religion : | |
| or Husband Name: | | Age /Calling : | 61 |

Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of **13.09.2024**

**1வது எதிரி ஆஜர். 2,3 வது எதிரிகள் ஆஜரில்லை. 2வது எதிரி சார்பாக குவிமுச பிரிவு 317 இன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. 3வது எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் ஆவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் மயிலாடுதுறை மாவட்ட குற்றப்பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 24.12.2020 ஆம் தேதி நாகப்பட்டினம் மாவட்ட குற்றபிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி பொழுது, வாதி ஆனந்த்ராஜ் கடந்த 30.11.2020 அன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகாரானது, எங்கள் காவல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த புகாரின் பேரில் , நான் மேற்படி 24.12.2020 ஆம் தேதி **முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ-22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கு கோப்பினை ஆய்வாளர் திரு. இராஜேந்திரன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாய்ப்பு கொடுக்கப்பட்டும் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை

**<u>நீதிமன்ற விசாரணை</u>**

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் 30.12.2020 அன்று கொடுக்கப்பட்ட புகார் மனுவானது எங்கள் காவல் நிலையத்திற்கு அன்றே அனுப்பி வைக்கப்பட்டது. கால தாமதம் ஆக 24.12.2020 ஆம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதற்கு காரணம் என்ன என்றால், மேற்படி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட புகார் குறித்து காவல் ஆய்வாளர் மனு எண் 185/2020 கொடுத்து, விசாரணைக்கு பிறகு முதல் தகவல் அறிக்கையை என்னை பதிவுமாறு கேட்டு கொண்டதால் நான் பதிவு செய்தேன். மேற்படி மனுவில் யார் யார் விசாரிக்கப்பட்டார்கள், விசாரணையில் என்ன சொன்னார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது தவிர்த்து வேறு எதுவும் எனக்கு தெரியாது.